# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

விசேஷ.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,113 — 1935 ம் ௵ பங்குனி௴ 30 ந் திகதி, சனிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்து 1 ம் இலக்க அட்டவணையின் B அட்சரமிடப்பட்ட பாகத்து 1 ம் பிரமாணத்துக் கமைவாக மட்டக்களப்பு அரசிறை வருமானப் பகுதியைச்சேர்ந்த கல்லடியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை நல்லதம்பி செல்வதுரையாகிய நான் இன்று தொடக்கம் மூன்று மாதங்களுக்குப் பின் மேற்படி பகுதியிலுள்ள கருங்கொட்டத்தீவில் கடமைசெய்யும் பொருட்டு மேற்படி சட்டத்தில் 6 ம் பிரிவுக் கடக்கமாக பிரசித்த நொததாரிசுவாக நியமனம் பெறுவதற்கு பதிவுகாரியகர்த்தருக்கு விண்ணப்பிக்க எண்ணியிருக்கிறேனென்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

கல்லடி,
1935 ம் ஆண்டு பங்குனி௴ 18 ந் உ.

க. ந. செல்வதுரை.

---

### 1907 ம் ஆண்டின் 8 ம் பிரிவின் 2 ம் சட்டத்தின் அட்டவணை 1 B இன்படி கொடுக்கப்பட்ட அறிவித்தல்.

தங்காலையில் இருக்கும் கபுகமகீகனகே டார்லிஸ் த சில்வா ஆகிய நான் கேகாலைப் பகுதியைச்சேர்ந்த கீழ்புலத்கமத்தில் கித்துல்கல என்னும் இடத்தில் சிங்களப் பாஷையில் நொத்தாரிஸ் வேலை பார்ப்பதற்கு என்னை அனுமதித்து என் பெயரைப் பதிவுசெய்வதற்கு இன்று தொடங்கிமூன்று மாதம் வரைக்கும் ரிஜிஸ்டர் ஜெனறல் துரையவர்களுக்கு விண்ணப்பிக்க எண்ணியிருககிறேன்.

தங்காலை,
1935 ம் ௵ மார்ச்௴ 14 ந் திகதி.

கே. ஜீ. டார்லிஸ் த சில்வா.

---

இதன்கீழ் கையொப்பம் வைக்கும், இரத்தினபுரி 34 ம் நிம்பர் இல் இருக்கும் க்கபொட விதானலாக அல்லது பலாங்கொட முகாந்திரமலாக ஜயவர்தனவாகிய நான், 1907 ம் ஆண்டு நொத்தாரிஸ் சட்டத்தின் செடூல் 1 B 2 வது பிரமாணத்தின் மிரகாரம் இன்று தொட்டு மூன்று மாசத்துக்குள், 1907 ம் ஆண்டின் முதலாவது சட்டத்தின் 6 ம் பிரிவின்படி கேகாலை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்க்க பதிவு கந்தோர்த் தலைவருக்கு விண்ணப்பஞ்செய்ய நான் எண்ணியிருக்கிறேனென்று இத்தால் அறிவிக்கின்றேன்.

இரத்தினபுரி,
1935 ம் ஆண்டு பங்குனி௴ 18 ந் திகதி.

ஜீ. வீ. ஜயவர்தன.

---


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

113——J. N. 46949—133 (3/35)

T 1